**O.S. No.   235 /2019**

**Date:18.03 .2026**

**பிவா.சா.1  கருப்பசாமி**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா வழக்கு பற்றிய சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் சர்வே எண்கள். 758 1 ஏக்கர் 49 செண்டு, 759 3 ஏக்கர் 81 செண்டு, 760 ல் 2 ஏக்கர் 61 செண்டு, 761 ல் 1 ஏக்கர் 34 செண்டு. மேற்கண்ட சர்வே எண்ணில் இந்த வாதிகள் தங்களுடைய பிராது தபசில் சொத்துக்களாக 759 ல் கீழ்புறம் 1 ஏக்கர் 30 செண்டு , 760 ல் 2 ஏக்கர் 61 செண்டு மற்றும் 761/1 ல் மேல்புறம் 94 செண்டு மொத்தம் 4 ஏக்கர் 85 செண்டுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். சர்வே எண். 759 ஐ பொருத்து எனக்கு கோரிக்கை உண்டா என்றால் இல்லை. சர்வே எண். 759 3 ஏக்கர் 81 செண்டு ஐ பொருத்து ஏதாவது ஆட்சேபணை இருக்கா என்றால் ஆட்சேபணை இல்லை. சர்வே எண். 759 ஐ கோபால் தேவருக்கு உரிமைப்பட்டு தான் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. சர்வே எண். 759 யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சாத்துாரப்பத்தேவருக்கு பாத்தியப்பட்டது. சர்வே எண். 759 க்குரிய பட்டா எண். 422 ஆகும். மேற்படி பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்றால் மாரிச்சாமி தேவர், மற்றும் சாத்துாரப்ப தேவர் ஆகியோர் பெயர்களில் உள்ளது. மேற்படி பட்டா செட்டில்மெண்டு ஆவணத்தின் மூலம் மாரிச்சாமி தேவருக்கு வந்தது. சர்வே எண். 761/1 ல் 1 ஏக்கர் 34 செண்டில் எனக்கு உரிமை உள்ளதா என்றால் உரிமை உள்ளது அதில் உள்ள 40 செண்டு இடத்தினை வேறு நபர்களுக்கு கிரையம் கொடுத்துள்ளேன். மேற்படி நான் 1971 ல் ராமையாத் தேவருக்கு கிரையம் கொடுத்தேன். 1971 ம் ஆண்டு பத்திரமானது எனது தந்தையார் எழுதிக்கொடுத்தது அதன் நகலை நான் பார்த்துள்ளேன் அது என் கைவசம் உள்ளது. அதில் 40 செண்டுக்கு மால் காண்பிக்கப்பட்டுள்ளது. 40 செண்டில் மேல் பக்கம் என்ன மால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி 1971 ஆண்டு ஆவணத்தில் மேற்கு பக்கம் மால் ஆக கோபால் தேவர் இடம் என்று தான் காண்பிக்கப்பட்டுள்ளது. அப்படி மேற்கு பக்கம் மால் ஆனது எனது தந்தை எழுதிக் கொடுத்த ஆவணத்தில் உள்ள இடம் இந்த வழக்கில் கண்ட 761/1 ல் உள்ள 94 செண்டு இடம் என்றால் சரிதான். என் தந்தை சரியான மால் காட்டி ஆவணங்கள் எழுதி கொடுக்கும் நபர் ஆவார். மேற்படி சர்வே எண்.761/1 ல் உள்ள 94 செண்டு

இடம் கோபால் தேவரின் பேரில் இருந்ததால் தான் அந்த ஆவணத்தில் மால் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 பாகப்பிரிவினை ஆவணம் யார் யாருக்கு இடையில் ஏற்பட்டது என்றால் ஆறுமுகத் தேவர் மற்றும் ஆறுமுகத் தேவரின் இறந்து போன மகனான குருசாமி தேவரின் மகன் மைனர் குருசாமி தேவர் மற்றும் வீருத் தேவர், சீனித் தேவர் , சாத்துாரப்ப தேவர், மலையாண்டி தேவர், சுப்பையா தேவர் ஆகியோர்களுக்கிடையே பாகப் பிரிவினை செய்யப்பட்டது. எனது அப்பாவுடன் பிறந்தவர் ஒரு நபர் தான், இவரைத் தவிர லட்சுமி அம்மாள் உள்ளார். பி.வா.சா.ஆ–2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள குருசாமி தேவர் தான் எனது அப்பா என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதும் உள்ளதா என்றால் 1971 ல் உள்ள கிரைய ஆவணத்தின் நகல் என்னிடம் உள்ளது. 759 ல் கண்ட சொத்திற்கான பட்டாவில் காட்டப்பட்டுள்ள சாத்துாரப்ப தேவரும் தற்போது பி.வா.சா.ஆ–2 ஆவணத்தில் காட்டப்பட்ட சாத்துாரப்ப தேவரும் ஒரே நபர் தான். பி.வா.சா.ஆ–2 ஆவணத்தில் 1 வது தபசில் சொத்தில் என்ன சர்வே எண் உள்ளது என்றால் அதைப் பற்றி எனக்கு சொல்ல தெரியாது. மேற்படி 1 வது தபசில் சொத்து யார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் இந்த ஆவணத்தில் கண்ட பாகப்பிரிவினைப்ப படி சொத்துக்கள் அனுபவம் செய்து வரவில்லை, வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டு அதன்படி அனுபவம் செய்து வருகிறார்கள். பி.வா.சா.ஆ–2 ஆவணத்தின் படி நடைமுறைக்கு வந்ததா அல்லது வாய்மொழி மூலம் பிரித்துக்கொண்டு அனுபவம் செய்து வருவது நடைமுறையில் உள்ளதா என்றால் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி தான் அனுபவம் செய்து வருகிறோம். 1 வது தபசில் 759 ல் 3 ஏக்கர் 81 செண்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண். 759 சொத்தில் எந்த அனுபவமும் கிடையாது. மேற்படி சொத்திற்கு சாத்துாரப்பா தேவர் மற்றும் மாரிச்சாமி ஆகியோர்கள் பெயரில் பட்டா இருந்தது. 759 மற்றும் 760 ல் உள்ள சொத்தும் ஒரே தபசில் தான் காட்டப்பட்டுள்ளது ஆனால் 759 வேறு நபர் பெயரில் இருப்பதற்கு காரணம் என்ன என்றால் தெரியாது. சர்வே எண். 761/1 ல் எங்கள் குடும்பத்திற்கு 40 செண்டு இடம் பாத்தியப்பட்டது. சர்வே எண். 761/1 ல் 1 ஏக்கர் 34 செண்டு முழுவதும் ஒரே நபருக்கு ஒதுக்கப்பட்டதாக உள்ளது. சர்வே எண். 761/1 ல் கண்ட 1 ஏக்கர் 34 செண்டு எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. பி.வா.சாஆ 2 ஆவணத்தில் சர்வே எண். 761/1 ல் கண்ட 1 ஏக்கர் 34 செண்டு நிலம் 1 வது தபசில் கீழ் ஒதுக்கப்பட்ட நிலையில் எதற்காக எனது

தந்தையார் விற்ற 1971 ஆவணத்தில் மேற்கு மாலாக கோபால் தேவர் இடம் காட்டப்பட்டுள்ளது என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண உறுதி கூற்றில் சொல்லியபடி யார் யாருக்கு இடையில் வாய்மொழி பாகப் பிரிவினை நடைபெற்றது என்றால் குருசாமி தேவர், சாத்துாரப்ப தேவர், கோபால் தேவர் ஆகியோர்களுக்கிடையே நடைபெற்றது. மேற்படி வாய்மொழி பாகப் பிரிவினை எப்போது நடைபெற்றது என்றால் சுமார் 40 வருடங்களுக்கு முன்பாக நடைபெற்றது. மேற்படி வாய்மொழி பாகப் பிரிவினை நடைபெற்றது எனக்கு நேரடியாக தெரியும். எனக்கு 18 வயது இருக்கும் போது மேற்படி வாய்மொழி பாகப் பிரிவினை நடைபெற்றது. மேற்படி வாய்மொழி பாகப் பிரிவினையில் எந்த எந்த சொத்துக்களை பிரித்துக்கொண்டீர்கள் மற்றும் யாருக்கு எந்த எந்த சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் வீட்டு இடத்தை மட்டும் பிரித்துக்கொண்டோம் காடுகளை பிரித்துக்கொள்ளவில்லை. அதன்படி சர்வே எண். 758 மற்றும் சர்வே எண்.759ல் உள்ள சொத்துக்களை சாத்துாரப்ப தேவர் அனுபவம் செய்து வந்தார்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.